**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை: திரு. S. அன்புதாசன், பி.காம். பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.3/2025 in OS.8/2025**

1. நாகம்மாள்
2. சசிக்கலா .... மனுதாரர்கள்/வாதிகள்

//எதிர்//

1. ஜெயக்குமார்
2. கார்த்திகை செல்வி
3. வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆத்துார்.
4. வட்டாட்சியர், ஆத்துார்
5. மாவட்ட ஆட்சியாளர் அவர்கள்,
திண்டுக்கல். .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது 18.02.2025 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணையில் இருந்து வந்து, இறுதியாக 5.12.2025 இன்று இந்த நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.முத்துவேல் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.P.சண்முகம், N.மணிமேகலை, திரு.R.முத்துரத்தினம் ஆகியோர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையை எதிருரையாக ஏற்றுக்கொண்டும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால்

தோன்றாதரப்பினராக்கப்பட்டும், மனு மற்றும் வழக்குக்கோப்பினைப் பரிசீலனை செய்தும் இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

மனுவில் கண்ட சொத்தின் இயற்தன்மையையும், பார்வையிட்டும், சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளந்து அத்துமால் செய்து அறிக்கை மற்றும் வரைபடத்துடன் தாக்கல் செய்யும் வகையில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டுமென்று கோரி ஆர்டர் 26 ரூல் 9 மற்றும்-ன்படி மனுதாரர்கள்/ வாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) <u>மனுவுரையின் சுருக்கம்:-</u>**

1. இப்பிராதில் "A" செடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்து 1,2 பிரதிவாதிகள், மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் வீடு கட்டிக் கொண்டுள்ள பகுதியாகும். "B" செடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்து வாதிகளின் வீடாகும். "C" செடியூலாக காட்டப்பட்டுள்ள சொத்து கதிர்பட்டி, ஊர்கட்டில் பஞ்சாயத்து தெருவிலிருந்து வாதிகளின் நிலத்திற்கு செல்லக்கூடிய நத்தம் புறம்புகல் வண்டிப்பாதை ஆகும். தாவா "C" செடியூல் வண்டிப்பாதை பிராது மாதிரி வரைபடத்தில் சிவப்பு கலரிட்டு காட்டப்பட்டுள்ளது.
2. பிராது தாவா A,B செடியூல் சொத்துக்கள் சர்வே எண். 208/4F-க்குள் கட்டுப்பட்ட சொத்தாகும். மேற்படி சர்வே எண். 208/4F நிலத்தின் மொத்த 77

செண்ட் நிலமானது ஆதியில் மல்லு கவுண்டருக்கு பாத்தியப்பட்டு, அவரது காலத்திற்குப் பின்பு அவரது வாரிசுகளில் ஒருவரான பரமசிவம் கடந்த 02.04.1983–ம் தேதியிலும் மற்றும் பரமசிவம் அவரது சகோதரர் சுப்பையா இருவரும் சேர்ந்து கடந்த 18.07.1984–ம் தேதியிலும், மனுதாரரின் கணவரும் 2ம் வாதியின் தகப்பனாரான மனோகரன் அவருக்கும், அவரது சகோதரர் ராஜேந்திரன் இருவருக்கும் சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள்.

3. அதன் அடிப்படையில் மனோகரனும், ராஜேந்திரனும் சேர்த்து கூட்டாக அனுபவித்து வந்து பின்பு ராஜேந்திரன் தனக்குண்டான பாதி பாகத்தை கடந்த 01.11.1995–ம் தேதியில் மனோகரனுக்கு சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளார். அதன்பின்பு மனோகரன் சர்வே எண். 208/4F–யை தன் குடும்பத்துடன் அனுபவித்து வந்த பின்பு கடந்த 24.09.1996–ம் தேதியில் இறந்துவிட்டார். மனோகரன் இறந்த பின்பு தாவா சொத்துக்களை மனுதாரர்கள் அனுபவித்து வந்துள்ளார்கள்.

4. மேற்படி சர்வே எண். 208/ 4F நிலத்தில் மனுதாரர் கடந்த 2010–ம் வருடம் "B" செடியூலான வீட்டை கட்டி 2ம் வாதியுடன் குடியிருந்து வந்துள்ளார். அதன்பின்பு 1ம் மனதாரர் "B" செடியூல் சொத்திற்கு பின்புறம் கோழி பண்ணை அமைத்து கோழிகளை வளர்த்து வந்துள்ளார். அதன்பின்பு ஊரில் தண்ணீர் பற்றாக்குறையாலும், 2ம் வாதியின் படிப்புக்காகவும், கடந்த 2016ம் வருடம் மறுபடியும் நடுப்பட்டியில் உள்ள வீட்டுக்கு வாதிகள் வந்துவிட்டார்கள்.

5. தாவா சொத்தான "B" செடியூல் சொத்திற்கு அருகில் 1,2 பிரதிவாதிகள் டீ கடை அமைத்து அதில் குடியிருந்து வந்துள்ளார்கள், 1ம் பிரதிவாதி 1ம் வாதியின் உடன்பிறந்த சகோதரி சந்திரா அவர்களின் மகன் ஆவார். அதனால் 1ம் பிரதிவாதி கடந்த 2019ம் வருடம் மார்ச் மாதம் முதல் வாரத்தில்

மனுதாரரிடம் தாவா "B" செடியூல் சொத்து யார் பயன்பாட்டிலும் இல்லாமல் பூட்டி இருப்பதால், தாவா "B" செடியூல் சொத்தில் உள்ள மனுதாரர்களின் வீட்டில் 1,2 பிரதிவாதிகள் குடியிருந்து கொள்வதாகவும், மனுதாரர்களுக்கு தேவைப்படும்போது வீட்டை காலி செய்து கொடுத்துவிடுவதாக, 1ம் பிரதிவாதி சொல்லியுள்ளார்.

6. 1ம் பிரதிவாதி தன் சொந்த அக்கா மகன் தன்னை ஏமாற்றிவிடமாட்டார் என்று நம்பி "B" செடியூல் வீட்டை 1ம் பிரதிவாதியிடம் மனுதாரர் கொடுத்துள்ளார். மனுதாரர்களும் அவ்வப்போது தாவா சொத்துக்களை பார்வையிட்டு வந்துள்ளார்.

7. இந்நிலையில் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 1,2 பிரதிவாதிகள் சர்வே எண். 208/4F நிலத்தில் தென்மேற்கு மூலையில், தாவா A செடியூல் சொத்தில் வீடு கட்டிக் கொண்டு வருவதாக தகவல் கிடைத்து அதிர்ச்சி அடைந்து, மனுதாரர் கடந்த 15.12.2024-ம் தேதியில் 1ம் பிரதிவாதியிடம் "என் இடத்தில் என்னிடம் கேட்காமல் எப்படி வீடு கட்டிக் கொண்டு இருக்கிற" என்று கேட்டுள்ளார். அதற்கு 1ம் பிரதிவாதி "நான் நத்தம் புறம்போக்கில் வீடு கட்டுவதற்கு உன்னிடம் நான் எதற்கு கேட்க வேண்டும்" என்று சொல்லி 1ம் மனுதாரரை தரக்குறைவாக பேசியுள்ளார்.

8. 1ம் மனுதாரர் என்ன செய்வது என்று தெரியாமல் அங்கு உள்ள ஊர் முக்கியஸ்தர்களை அழைத்து கொண்டு பேசியதில் முடிவாக தாவா "A" செடியூல் சொத்தில் 1,2 பிரதிவாதிகள் சர்வேயர் மூலம் அளவீடு செய்யும் வரை வீடு கட்ட கூடாது என்று முடிவு செய்துள்ளார்கள். ஆனால் 1,2 பிரதிவாதிகள் பஞ்சாயத்து முடிவுக்கு கட்டுப்படாமல் வீடு கட்டிக் கொண்டே இருந்துள்ளார்கள். அதை தெரிந்து கொண்ட மனுதாரர்கள் கடந்த

28.01.2025-ம் தேதி தாவா சொத்துக்களுக்கு வந்து பார்க்கும் போது, 'A" செடியூல் சொத்தில் வீடு கட்டிக்கொண்டு வருவது இல்லாமல் மனுதாரர்கள் நிலத்திற்கு செல்லக்கூடிய தாவா "C" செடியூல் வண்டிப்பாதையில் செட் அமைத்துள்ளார்கள்.

9. அதனால் மனுதாரர்கள், அன்று வந்த ஊர் முக்கியஸ்தர்களிடம் 1,2 பிரதிவாதிகள் மேற்கொண்டு "A" செடியூல் சொத்தில் வீடு கட்டக்கூடாது என்றும், "B" செடியூல் உள்ள மனுதாரர்கள் வீட்டை காலி செய்துகொடுக்க வேண்டும் என்றும், தாவா சொத்திற்கு வரும் பாதையை மறைத்து கட்டியுள்ள செட்டை அகற்றிக் கொடுக்க வேண்டும் என்றும் முறையிட்டுவிட்டு மேற்கொண்டு வீடு கட்ட விடாமல் தடுத்துள்ளார்கள்.

10. ஆனால் 1,2 பிரதிவாதிகள் ஊர் முக்கியஸ்தர்களிடம் தாவா "A" செடியூல் சொத்து நத்தம் சர்வே எண்ணில் தான் வருகின்றது. அதனால் தாங்கள் வீடு கட்டுவதை தடுக்க கூடாது என்றும், புதிய வீடு கட்டுவதற்கான மூலப் பொருட்கள் வைக்கவே தற்காலிகமாக செட் அமைந்துள்ளதாகவும், வீடு கட்டிய உடன் "B", "C" செடியூல் சொத்துக்களை காலி செய்து கொடுத்து விடுவதாகவும், அதே போன்று சர்வேயர் மூலம் அளவீடு செய்து, "A" செடியூல் சொத்து மனுதாரர்கள் இடத்திற்குள் வந்தால் வீட்டை இடித்து கொடுத்துவிடுவதாக சொல்லியுள்ளார்கள்.

11. ஆனால் மனுதாரர்கள் அதற்கு உடன்படாமல் அளவீடு செய்யும் வரை மேற்கொண்டு கட்டக்கூடாது என்று தடுத்துள்ளார்கள். அதனால் ஆத்திரம் கொண்ட 2ம் பிரதிவாதி வாதிகள் மீது பொய்யாக கடந்த 29.01.2025-ம் தேதியில் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டுவதாகவும், அடிக்க வருவதாகவும், சின்னாளபட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.

அதன் அடிப்படையில் சின்னாளபட்டி காவல்நிலையத்தில் இருந்து கடந்த 30.01.2025-ம் தேதியில் மனுதாரர்களையும், 1,2 பிரதிவாதிகளையும் வரச் சொல்லி விசாரணை செய்ததில் 1,2 பிரதிவாதிகளிடம் மனுதாரர்கள் தாவா சொத்துக்களை அளவீடு செய்யும் போது எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்றும், தாவா சொத்து அளவீடு செய்து மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் வந்தால் மனுதாரர்களிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று சொல்லி அனுப்பியுள்ளார்கள்.

12. மேற்படி மனுதாரர்கள் தாவாச் சொத்துக்களை, கடந்த 13.02.2025-ம் தேதி ஊர் முக்கியஸ்தர்களை வைத்து சர்வேயர் மூலம் அளவீடு செய்துள்ளார்கள். அதில் "A" செடியூல் சொத்து மனுதாரர்களின் நிலத்திற்குள் வந்துள்ளது. வாதிகள் ஊர் முக்கியஸ்தர்களை கொண்டு 1,2 பிரதிவாதிகளிடம் பேசியுள்ளார்கள். அதில் 1,2 முக்கியஸ்தர்கள் பேசியதற்கு உடன் படாமல் ஊர் முக்கியஸ்தர்களையும் மனுதாரர்களையும் தரக்குறைவாக பேசி நாங்கள் அப்படித்தான் வீடுகட்டுவோம் அதே போன்று வீட்டையும், செட்டையும் காலி செய்து கொடுக்க முடியாது என்றும், தாவாச் சொத்துக்கள் அனைத்தும் எங்களுக்கு சொந்தம் உங்களால் என்ன முடியுமோ செய்து கொள்ளுங்கள் என்று அடாவடித்தனமாக பேசியுள்ளார்கள்.

13. தாவா "A" செடியூல் சொத்தில் 1,2 பிரதிவாதிகள் கட்டும் வீடானது கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் கட்டிக் கொண்டு வருகின்றார்கள். 3,4 பிரதிவாதிகள் சரியான முறையில் ஆவணங்களை பரிசீலனை செய்யாமலும், உரிய முறையில் வீடுகட்டும் இடத்தை சரிவர பார்வையிட்டு யார் இடம் என்று ஸ்தல ஆய்வு செய்யாமல் 1,2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக வீடுகட்ட அனுமதித்துள்ளார்கள். மனுதாரர்களது நிலங்களான தாவா A,B செடியூல்

சொத்துக்கு கட்டுப்பட்ட சர்வே எண். 208/4F நிலங்களுக்கு சென்றுவர தாவா "C" செடியூல் வண்டிப்பாதையை தவிர வேறு மாற்றுப்பாதை இல்லை.

14. எனவே தாவா "A" செடியூல் சொத்து மனுதாரர்களுக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டதென விளம்புகை செய்தும், அதன் தொடர் பரிகாரமாக தாவா "A" செடியூல் சொத்தில் 1,2 பிரதிவாதிகள் அத்துமீறி கட்டியுள்ள கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்தி காலியிடமாக வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்புவிக்கும்படி சுவாதீன பரிகாரம் வழங்கக்கோரியும், தாவா 'A" செடியூல் சொத்தில் 1,2 பிரதிவாதிகள் மேற்கொண்டு எவ்விதமான கட்டிட வேலைகளும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், தாவா "B" செடியூல் சொத்தான வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீட்டை 1,2 பிரதிவாதிகள் காலி செய்து வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்புவிக்கும்படி சுவாதீன பரிகாரம் வழங்கக்கோரியும், தாவா "C" செடியூல் சொத்து பொது வண்டிப்பாதை என விளம்புகை பரிகாரம் வழங்கக்கோரியும், தாவா "C" செடியூல் வண்டிப்பாதையில் 1,2 பிரதிவாதிகள் அமைத்துள்ள செட்டை அப்புறப்படுத்தும்படி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும், தாவா 'A' செடியூல் சொத்தில் பிரதம மந்திரி திட்டத்தின் 1,2 பிரதிவாதிகளுக்கு பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்டுள்ளதாலும், 3 முதல் 5 பிரதிவாதிகளால் கொடுக்கப்பட்டுள்ளதாலும், தாவா "C" செடியூல் வண்டிப்பாதை அரசு நத்தம் புறம்புகல் நிலம் என்பதாலும், 3 முதல் 5 பிரதிவாதிகள் இவ்வழக்கில் Formal Parties ஆக சேர்க்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர்களால் 1,2 பிரதிவாதிகள் மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15. இந்த வழக்கு சொத்தில் எதிர்மனுதார் ஆக்கிரமித்து கட்டியுள்ள தாவா சொத்தை இடித்து அப்புறபடுத்த செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும், காலியிடமாக மனுதார்கள் எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளிடம் ஒப்படைக்க சுவாதீனப் பரிகாரம் வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனு சொத்து சம்மந்தமாக, சமூகம் நீதிமன்றம் மூலம் ஆணையர் ஒருவரை நியமனம் செய்து மனு சொத்தின் இயற்தன்மையை பார்வையிட்டு சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் துணையுடன் அளந்து அத்துமால் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>**1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிருரையின் சுருக்கம்:–**</u>

1. இதனடியில் 1–ம் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒத்துக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர, பிற சங்கதிகளை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். பிராது பாரா எண்: 4, 6, 7–ல் கூறியுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும்
2. பிராது பாரா எண்: 5–ல், தாவா A,B செடியூல் சொத்துக்கள் 208/4F–க்குள் கட்டுப்பட்ட சொத்தாகும் என்றும் சர்வே எண்: 208/41 நிலத்தின் மொத்த 77 செண்ட் நிலமானது ஆதியில் மல்லு கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதற்கு பின்னர் மல்லுக்கவுண்டர் காலத்திற்குப் பின்பு அவரது வாரிசுகளில் ஒருவரான பரமசிவம் கடந்த 02.04.1983–ம் தேதியிலும் மற்றும் பரமசிவம் அவரது சகோதரர் சுப்பையா இருவரும் கடந்த 18.07.1984–ம் தேதியிலும், 1–ம் வாதியின் கணவரும், 2–ம் வாதியின்

தகப்பனாரான மனோகரன் அவருக்கும், அவரது சகோதார் ராஜேந்திரன் இருவருக்கும் சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளார்கள் என்றும், அதன் அடிப்படையில் மனோகரனும், ராஜேந்திரனும் சேர்த்து கூட்டாக அனுபவித்து வந்து பின்பு ராஜேந்திரன் தனக்குண்டான பாதி பாகத்தை கடந்த 01.11.1995–ம் தேதியில் மனோகரனுக்கு சுத்தக் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதன்பின்பு மனோகரன், சர்வே எண்: 208/4F –னய தன் குடும்பத்துடன் சுயராஜ்ஜியமாக அனுபவித்து வந்த பின்பு, கடந்த 24.09.1996–ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், மனோகரன் இறந்த பின்பு தாவா சொத்துக்களை வாதிகள் அடைந்து சுயராஜியமாக அனுபவித்து வந்துள்ளார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளது தவறானதாகும். அதனை வாதிகளே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

3. தாவா சொத்தும் இன்னும் வேறு சில சொத்துக்களும் ஆதியில் மல்லுக்கவுண்டர்க்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து, அவருடைய காலத்திற்கு பின்பு அவருடைய மக்களான பரமசிவம், சுப்பையா அனுபவித்து வந்துள்ளார்கள். தாவா சொத்து தவிர வேறு சில சொத்துக்களை பகுதி பரமசிவம் விற்பனை செய்தும், தாவா சொத்து 1–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் தாயார் சந்திரா என்பவரும் கூட்டு வரம்பிற்கும் மேற்பட்டு யாருடைய அனுபவத்திலும், உரிமையிலும் சட்டகால ஆட்சேபனையும் இன்றி, நிராட்சேபனையாக வெளிப்படையாக அனுபவித்து வரப்பட்டது.

4. இந்நிலையில் தாவா சொத்தான புல எண்: 208/41–ல் செ 77–ல் தென்பகுதியில் 1–ம் பிரதிவாதியின் தாயார் சந்திரா என்பவரும், 1–ம் பிரதிவாதியும் கடந்த 2005–ம் வருடம் தென்வடல் இருபுறமும் 13 அடியும், கிழமேல் இருபுறமும் 27 அடி அளவில் வீடு கட்டியும் அனுபவித்து

வந்துள்ளனர். மேற்படி வீட்டிற்கு 1-ம் பிரதிவாதியின் தாயார் சந்திரா பெயரில் 2005-ம் வருடமே வீட்டுவரி ரசீது ஏற்பட்டும், தண்ணீர் வரி ரசீது ஏற்பட்டும் தொடர்ந்து வரி வகையறா செலுத்தி அனுபவித்து வந்தும், அதற்கு பின்பு மேற்படி வீட்டிற்கு வடக்குபுறம் தென்வடல் இருபுறமும் 17 அடியும், கிழமேல் இருபுறமும் 61 அடியும் அளவில் ஓடு போட்ட செட் அமைத்து கோழிப்பண்ணை வைத்து தொழில் செய்து வந்துள்ளார்கள்.

5. இந்நிலையில் சந்திரா என்பவர் கடந்த 22.02.2010-ம் தேதி இறந்துவிட்டார். அதன்பின்னர் மேற்படியாரின் வாரிசான 1-ம் பிரதிவாதி சொத்தை அடைந்து சட்டகால வரம்பிற்கும் மேற்பட்டு தனது சுவாதீனத்தில் வைத்து யாருடைய ஆட்சேபனையும் இன்றி நிராட்சேபனையாக அனுபவித்து வருகிறார். 1-ம் பிரதிவாதியின் அனுபவத்தையும், உரிமையையும் ஆட்சேபனை செய்ய வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை.

6. வாதி, பிராது பாரா எண்: 5-ல் குறிப்பிட்டுள்ள விசயங்கள் தவறானவை ஆகும். வாதிகள் குறிப்பிட்டுள்ள 02.04.1983-ம் தேதிய கிரைய ஆவண எண்: 376/1993-ல் புல எண்: 208/4-ல் ஏ 2 செ. 11-ல் வடபுறம் செ 30 1/2 ம், 18.07.1984-ம் தேதிய கிரைய ஆவண எண்: 752/1984-ல் புல எண்: 208/4-ல் எ 2 செ 11-ல் தென்புறம் செ 30 1/2-ம் கிரையம் செய்யப்பட்டுள்ளதாக ஆவணம் பதிவு விபரத்தை பார்த்து 1-ம் பிரதிவாதி அறிகிறார். மேலும் ராஜேந்திரன் தனக்குண்டான பாகத்தை 01.11.1995-ம் தேதியில் மனோகரனுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக வாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள்.

7. ஆனால் மேற்படி கிரைய ஆவண எண்: 1199/1995 ஆவணத்தில் 2-வது லக்க சொத்து விபரத்தில் தனக்குரிய 38 1/2-ம் என்று குறிப்பிட்டு ஆவணம்

பதிவு செய்துள்ளார்கள். ஆனால், மேற்படி ராஜேந்திரன் கிரையம் பெற்றதாக குறிப்பிடும் 18.07.1984, 02.04.1983–ம் தேதிய ஆவணத்தில் செ 30 1/2 + 30 1/2 கிரையம் பெற்றதாக குறிப்பிட்டு அதன்பின்னர், மேற்படி அளவை விட 8 செண்ட் கூடுதலாக கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளார்கள். இதிலிருந்தே மேற்படியார்கள் மோசடியாக ஆவணங்கள் தயார் செய்துள்ளார்கள் என்பது தெளிவாகிறது. தனக்கு உரிமையில்லாத சொத்தை பொருத்து, ராஜேந்திரன், உரிமை மாற்றம் செய்ய முடியாது. அவ்வாறு செய்தாலும் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேற்படி ராஜேந்திரன், மனோகரன் கிரையம் பெற்றதாக குறிப்பிடும் சொத்திற்கும், 1–ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ள புல எண்: 208/4F–க்கும் எந்த சம்மந்தமும் இல்லை. வாதிகள் பிராது 5–வது பாராவில் புல எண்: 208/4–ல் ஏ 2 செ 11–ல் என்று குறிப்பிட்டுள்ளார்கள். மேற்படி புல எண்: 208/4 என்பது பல்வேறு உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது.

8. பிராது பாரா எண்: 6 முதல் 11 வரை சொல்லப்பட்ட விசயங்களில் முற்றிலும் தவறானவை ஆகும். அதில் 1–ம் பிரதிவாதி, 1–ம் வாதியின் உடன்பிறந்த சகோதரி 2025 சந்திரா அவர்களின் மகன் என்பது மட்டுமே உண்மை.
9. மேற்படி 2–ம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பிலிருந்து புல எண் 208/4F–ல் உள்ள போர்வெல்லில் உள்ள சப்–மோட்டார் மூலம் தண்ணீர் எடுத்து தாவா சொத்தில் ரோஜா பூச்செடி பயிரிட்டு சட்டகால வரம்பிற்கு மேற்பட்டு யாருடைய ஆட்சேபணையும் இன்றி 1,2 பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள். வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.
10. பிராது பாரா எண்: 8–ல் 1–ம் வாதி, 1–ம் பிரதிவாதியிடம் கடந்த 15.12.2024–ம் தேதி, ஏன் என்னிடத்தில் கேட்காமல் வீடு கட்டிக் கொண்டிருக்கிறாய் என்று

கேட்டதாக குறிப்பிட்டுள்ளார். தாவா சொத்தின் தென்மேற்கு பகுதியில் கிழமேல் இருபுறமும் 22 அடியும், தென்வடல் இருபுறமும் 33 அடி அளவில் வீடு கட்டி 1,2 பிரதிவாதிகள் முடித்து வசித்து வருகிறார்கள்.

11. 1-ம் பிரதிவாதி கடந்த 2024 -ம் வருடம் ஜீன் மாதத்திலேயே வீடுகட்டி நடவடிக்கை மேற்கொண்டு வந்து, அதன்பின்னர் வீட்டு பணிகள் முடிந்தநிலையில் வாதிகள் உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

12. மேலும் பிராது பாரா எண்: 8-ல் தாவா சொத்திற்கு செல்லக்கூடிய "C" செடியூலில் கண்ட வண்டிப்பாதையில் செட் அமைத்துள்ளதாக கூறியுள்ளதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்கள். தாவா புல எண்: 208/4F-க்கு உட்பட்ட அனைத்து சொத்திற்கும் செல்வதற்கு 208/4F-சொத்திற்கும் கிழக்கே உள்ள வண்டிப்பாதை வழியாக சென்று அனுபவித்து வருகிறார்கள். மேற்படி உண்மை விபரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள், மேற்படி 1,2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ள வீட்டிற்கும் தென்புறம் உள்ள கிராம நத்தம் பகுதியில் 1-ம் பிரதிவாதியின் தாயார் சந்திரா என்பவர் பெயரில் புல எண்: 209/32-க்கு உட்பட்ட பகுதிக்கு பட்டா வழங்கப்பட்டு அனுபவித்து வருகிறார்.

13. மேற்படி சொத்திற்கும் கிழக்கே 1-ம் பிரதிவாதி தகரசீட் போட்ட செட் அமைத்து அனுபவித்து வந்து 1-ம் பிரதிவாதி பெயரில் வீட்டு வரி ரசீது ஏற்பட்டு சட்டகாலவரம்பிற்கும் மேற்பட்டு வெளிப்டையாக அனுபவித்து வருகிறார். 2-ம் பிரதிவாதி பெயரில் புல எண்: 209/2-ல் பட்டா வழங்கப்பட்டு கட்டிடம் கட்டி அனுபவித்து வருகிறார். மேற்படி சொத்தில் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார்.

14.பிராது பாரா எண்: 9-ல் வாதிகள் தாவா சொத்தை 13.02.2025-ம் தேதி ஊர் முக்கியஸ்தர்களை வைத்து சர்வே செய்ததாகவும் அதற்கு 1,2 பிரதிவாதிகள் உடன்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளது தவறானதாகும். அவ்வாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை.

15.பிராது பாரா எண்: 11-ல் தாவா "A" செடியூல் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரியுள்ளார். தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லாதபோது, விளம்புகை பரிகாரம் கோர உரிமையில்லை. எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு ஆகும்.

16.தாவா "A,B" செடியூல் சொத்துக்களில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை. 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து ஆகும். "C" செடியூல் சொத்தும் 1-ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டும், வீட்டுவரி செலுத்தியும் தன்னுடைய கைவசம் வைத்தும் சட்டகால வரம்பிற்கும் மேற்பட்டு வெளிப்படையாக யாருடைய ஆட்சேபணையும் இன்றி அனுபவித்து வருகிறார்கள். எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு ஆகும்.

17.தாவா "C" செடியூல் சொத்து வண்டிப்பாதை என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி சொத்தில் வண்டிப்பாதை உள்ளது என்பதற்கான அரசு ஆவணங்கள் எதும் வாதிகள் தாக்கல் செய்யவில்லை. எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு ஆகும்.

18. பிராது உரிமையியல் நடைமுறைச் சட்டப்படி தயார் செய்யப்படவில்லை. பிராது பரிகாரத்தின் படி சரியான நீதிமன்ற முத்திரைக் கட்டணம் செலுத்தவில்லை. பிராது சொத்து விபரத்தில் குறிப்பிட்டு விஸ்தீரணம் நான்கு

மால் அனைத்து தவறானவை ஆகும். எனவே தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு ஆகும்.

19. பிராது மாதிரி வரைபடம் 1,2 பிரதிவாதிகளுக்கு சார்பு செய்யப்படவில்லை. மாதிரி வரைபடத்தை பார்வையிட்ட பின்பு, தேவைப்படும் பட்சத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையை 1–ம் பிரதிவாதி தக்க வைத்துக் கொள்கிறார். எனவே, தாவா வழக்கை 1,2 பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில் மனுதாரர்கள் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4) **<u>தீர்வு</u>**

இவ்வழக்கானது, பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம், சுவாதீனமீட்பு பரிகாரம், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்களுக்காக வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில் மனுதாரர்கள் /வாதிகள் தாவா A அட்டவணை சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அத்துமீறி கட்டியுள்ள கட்டிடத்தை இடிக்க சுவாதீனமீட்பு பரிகாரம் கேட்டுள்ளதாலும், B அட்டவணை சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் கொண்டுள்ள சுவாதீனத்தை மீட்க பரிகாரம் கோரியும், தாவா C அட்டவணை சொத்தான வண்டிப்பாதையில் 1, 2 பிரதிவாதிகள் அமைத்துள்ள செட்டை அப்புரபடுத்த வேண்டி செயலுறுத்தக்கட்டளை பரிகாரம் கூறி இருப்பதால், தங்களுடைய வழக்கை நிரூபிக்கும் பொருட்டு நீதிமன்ற

ஆணையர் நியமிக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி ஏற்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இம்மனுவை அனுமதிக்கக்கூடாது என்பதற்கு 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள், இம்மனுவை தள்ளுபடி செய்வதற்கு தற்போதைய நிலையில் போதுமான காரணங்கள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

சுவாதீன மீட்பு பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்தை பொருத்து தரப்பினருக்கிடையே உள்ள இவ்வழக்கின் பொருண்மை குறித்து இறுதியாக தீர்மானிக்க, நீதிமன்ற ஆணையர் நியமனம் சட்டப்படியும் பொருண்மைபடியும் மிகவும் அவசியம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இம்மனுவை அனுமதிக்காத பட்சத்தில், வாதிகள் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களை பொருத்து இறுதியாக தீர்மானிக்க இயலாது. எனவே, மனுதாரர்களுடைய சொத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்வதற்காக இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**எனவே**, நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் திரு. A.திருமூர்த்தி அவர்களை நியமனம் செய்து, அவருக்கு ஊதியமாக ரூ. 15,000/- நிர்ணயம் செய்தும், மேற்படி நீதிமன்ற ஆணையர் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் தாவாச்சொத்தை அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடத்தை 28.01.2026ம் தேதிக்குள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் நீதிமன்ற ஆணையருக்கான ஊதியத்தை இந்த உத்தரவு நாளிலிருந்து 10 நாட்களுக்குள் நேரடியாக பணமாக நீதிமன்ற ஆணையரிடம் செலுத்தி, அதற்கான குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்ய வேண்டும். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாவாச்சொத்தினை தல ஆய்வு செய்வதற்கு முன்பாக அதுகுறித்து இருதரப்பினருக்கும் பதிவுத்தபால் மூலமாக தகவல் தெரிவிக்க வேண்டுமென்றும், தலஆய்வு மேற்கொள்ளும் அன்றையதினம் இருதரப்பினராலும் செய்யப்படும் ஆட்சேபணைகளையும், கொடுக்கப்படும் ஆவணங்களையும் அவரது அறிக்கையில் பதிவு செய்யவேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

iv) **முடிவாக**,

மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. வழக்கு செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லி, கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை திருத்தி, 2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 5 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN — Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN Date: 2025.12.06 18:26:32 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.

<u>இணைப்பு:-</u>

<u>மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் – இல்லை</u>

<u>எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :</u> – இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN — Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN Date: 2025.12.06 18:26:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்